தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# சொர்ணவாரி பருவ நெல் சாகுபடி தீவிரம்

First Published : 18 May 2011 02:12:22 AM IST



கடலூர் அருகே சொர்ணவாரி நெல் சாகுபடிக்கான நாற்றுகளை, நாற்றங்கால்களில் இருந்து சேகரிக்கும் விவசாயத் தொழிலாளர்கள்.

கடலூர், மே 17: கடலூர் மாவட்டத்தில் தற்போது சொர்ணவாரி பருவ நெல் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் சுமார் 3 லட்சம் ஏக்கர் நிலங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பருவ நிலைக்கு ஏற்றவாறு நெல் சாகுபடி பரப்பளவு மாறுபடும். பெரும்பாலும் சம்பா பருவத்தில் மட்டுமே 3 லட்சம் ஏக்கரிலும் நெல் பயிரிடப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் தற்போது கடலூர், விருத்தாசலம், கம்மாபுரம், திட்டக்குடி, சேத்தியாத்தோப்பு மற்றும் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சில இடங்களில் மட்டும் ஆழ்குழாய்க் கிணற்றுப் பாசன வசதி உள்ள பகுதிகளில் சொர்ணவாரி நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

÷ஏப்ரல், மே மாதங்களில் கடலூர் மாவட்டத்தில் சொர்ணவாரி நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாதக் கடைசியில் சொர்ணவாரி நெல் நடவு முடிவடையும். பெரும்பாலும் 100 அல்லது 105 நாள்களில் அறுவடைக்கு வரும் ஏ.டி.டி. 43 ரக நெல் நடப்பட்டு வருகிறது.

இந்தாண்டு சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் சொர்ணவாரி நெல் சாகுபடி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்று கடலூர் மாவட்ட வேளாண் துறை தெரிவிக்கிறது.

இந்த மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகளில் 95 ஆயிரம் விவசாய மின் இணைப்புகள் உள்ளன. மின்சாரப் பற்றாக்குறை காரணமாக சொர்ணவாரிக்கு வாய்ப்புள்ள பெரும்பாலான நிலங்களில் நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. எனவேதான் சொர்ணவாரி நெல் சாகுபடி பரப்பளவு 20 ஆயிரம் ஏக்கராகக் குறைந்து இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

நெல் நடவு செய்து நன்றாக விளைந்திருக்கும் நிலையில் ஒரு வாரம் தொடர் மின் வெட்டு அல்லது மின் மாற்றிகள் பழுது என்ற நிலை ஏற்பட்டு விட்டால் நெற்கதிர்கள் அனைத்தும் பாழாகிவிடும். இந்த அச்சம் காரணமாக, தங்களுக்கு வாய்ப்பு இருந்தும் 50 சதவீத நிலங்களில் மட்டுமே நெல் நடவு செய்து இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இதுகுறித்து மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கார்மாங்குடி வெங்கடேசன் கூறியது:

÷எனக்கு 5 ஏக்கரில் சொர்ணவாரி நெல் சாகுபடிக்கு வாய்ப்பு இருந்தும் 3 ஏக்கரில் மட்டுமே நெல் சாகுபடி செய்து இருக்கிறேன். கரும்புப் பயிராவது மின் வெட்டு இருந்தாலும் தாக்குப் பிடிக்கும். பாதுகாத்து விட முடியும். ஆனால் நெல் சாகுபடி அப்படி இல்லை. மின் வெட்டு விவசாயத்தை குறிப்பாக நெல் விவசாயத்தை பெரிதும் பாதிக்கிறது என்றார்.

மின் வெட்டு குறித்து மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறியது:

÷கடலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் மிக ஆழத்தில் சென்றாலும் தண்ணீர் கிடைக்கிறது. எனவேதான் இந்த மாவட்டத்தில் ஆண்டு முழுவதும், கரும்பு, நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மின் வெட்டு காரணமாக அனைத்து பயிர்களின் சாகுபடி பரப்பளவும் 50 சதவீதம் குறைந்து விட்டது. விவசாயத்தையே நம்பி இருக்கும் கடலூர் மாவட்டத்தில் மின் வெட்டு காரணமாக வேளாண் விளை பொருள்கள் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. சொர்ணவாரி நெல் சாகுபடி பரப்பளவும் 50 சதவீதத்துக்கும் மேலாகவே குறைந்து விட்டது என்றார்.

**மழையின்மையால் மிளகாய் வத்தல் விளைச்சல் பாதிப்பு**

First Published : 17 May 2011 11:13:12 AM IST

ராஜபாளையம், மே 16: நெல்லை, விருதுநகர் மாவட்டங்களில் மானாவாரி, புஞ்சை காடுகளில் வத்தல் பரவலாகப் பயிரிடப்படும். இப் பகுதியில் பயிர் செய்யப்பட்டு, சாகுபடியாகும் வத்தல் சங்கரன்கோவில், ராஜபாளையம், விருதுநகர் வத்தல் கமிஷன் கடைகளுக்கு கொண்டுவந்து விற்பனை செய்யப்படும்.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தென்மேற்குப் பருவ மழை, வடகிழக்குப் பருவமழை போதிய அளவில் பெய்யாமல் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதால், இப் பகுதியில் வத்தல் விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. இதனால் வத்தல் விலையும் கடுமையாக உயர்ந்தது.
தற்போது விருதுநகர், ராஜபாளையம், சங்கரன்கோவில் பகுதியில் புது வத்தல் குவிண்டால் ரூ. 8,500 முதல் ரூ. 8,800 வரை விலை நிலவுகிறது. முண்டு வத்தல் ரூ. 7,800 முதல் ரூ. 8,200 வரையும், சோடை வத்தல் ரூ. 3,200 வரையும் விலை நிலவியது. சில்லரை விலையாக ஒரு கிலோ சம்பா வத்தல் ரூ. 100 விலை நிலவியது. ஆந்திரம் மற்றும் தமிழகத்திலிருந்து புது வத்தல் வரத்து அதிகரித்தால்தான் வத்தல் விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**கிருஷ்ணகிரி பகுதியில் மா விவசாயிகளின் தவிப்பு**

பதிவு செய்த நாள் : மே 18,2011,00:00 IST



மகாராஷ்டிராவில் உள்ள ரத்னகிரி மற்றும் சிந்து துர்க் மாவட்டங்களில் நமது நாட்டில் உற்பத்தியாகும் ஆல்போன்சா மாம்பழங்களின் அளவு சுமார் 50 சதவீத அளவாகும். தமிழ்நாட்டின் உற்பத்தி அளவு 25 சதவீதம்தான். மீதமுள்ள உற்பத்தி கர்நாடகா, ஆந்திராவிலிருந்து கிடைக்கிறது. ஆல்போன்சாவில் காய்ப்பு சீசன் துவங்கும்போது மழை, பனி காரணங்களால் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆல்போன்சா சாகுபடியாளர்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரிமை மா மாவட்டம் என்கிறார்கள். இங்கு 36 ஆயிரம் எக்டேர் பரப்பில் சுமார் 3 லட்சம் டன் மாம்பழங்கள் உற்பத்திஆகின்றது. இங்கு தோத்தாபுரி,

ஆல்போன்சா, செந்தூரா, நீலம், பங்கனபள்ளி போன்ற வியாபார ரகங்கள் சாகுபடியில் உள்ளன. இவைகளில் தோத்தாபுரியில் கிடைக்கும் உற்பத்தி மட்டும் 80 சதவீத உற்பத்தியாகும். இந்த வருடம் கிருஷ்ணகிரி பகுதியில் சீசன் சரியில்லாமல் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கிருஷ்ணகிரியில் வியாபார மா ரகங்களை விட தோத்தாபுரி ரகம் இதுவரை நல்ல பலனைக் கொடுத்துவந்தது. ஏனெனில் தோத்தாபுரி ஒரு சிறந்த பழக்கூழ் ரகம். இது ஏற்றுமதி செய்வதற்கு மிக ஏற்றது. இதனால்தான் கிருஷ்ணகிரி மற்றும் சித்தூர் போன்ற பகுதிகளில் பழக்கூழ் தொழிற்சாலைகள் அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மா பழக்கூழ் சவுதி அரேபியா, பர்ஷியன் கல்ப், ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. விற்பனையில் நூறு கோடி மதிப்புள்ள அந்நிய செலாவணி கிடைத்துவந்தது. எகிப்து, லிபியா, ஜப்பான் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள துன்பங்களால் இந்நாடுகளுக்கு பழக்கூழ் அனுப்ப இயலாத நிலையில் கிருஷ்ணகிரி விவசாயிகள் உள்ளனர். தயாரிக்கப்பட்ட பழக்கூழ்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. நம் நாட்டிலுள்ள பழக்கூழ் தொழிற்சாலைகளில் அதிக அளவில் பழக்கூழ் கையிருப்பில் உள்ளது. விற்க இயலவில்லை. இதனால் தொழிற்சாலைகளை இயக்க இயலாத சூழ்நிலையில் சிரமம் தோன்றியுள்ளது. பழக்கூழ் தயாரிப்பவர்கள் கடும் நஷ்டத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர். சென்ற வருடம் மா உற்பத்தி குறைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த வருடம் தொழிற்சாலைகள் கஷ்டப்படுகின்றன.

கிருஷ்ணகிரி பகுதியில் மா ரகங்களில் வியாபார ரகங்கள் சாப்பிடுவதற்கு ஏற்றது. ஓரளவு பழங்கள் காய்ப்பில் உள்ளன. தற்போது நல்ல விலையில்லை. மேலும் இந்த பழங்கள் கைக்கு வருமாவென்று தெரியவில்லை. ஆலங்கட்டி மழை வந்தால் என்னவாகும் என்று தெரியவில்லை. கிருஷ்ணகிரி விவசாயிகள் தவித்துக்கொண்டு இருக்கின்றனர். இன்றைய சூழ்நிலையில் மாம்பழ விலை நிதானமாக உள்ளது. ஒரு வேளை மழை இல்லாவிடில் உற்பத்தி பாதிக்காது. உடனே மாம்பழ விலை கிடுகிடுவென்று ஏறிவிடும். மா விவசாயம் அடிக்கடி பருவக் கோளாறினால் பாதிக்கப் படுகிறது. இதோடு விற்பனை பிரச்னையும் ஏற்படுகின்றது.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : மே 18,2011,00:00 IST



**வனிலாவைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்பாடு**: வனிலாவை குறைந்த எண்ணிக்கை உடைய பூச்சிகளே தாக்கி சேதம் விளைவிக்கின்றன.

**வனிலா நாவாய்பூச்சி:** இளம் குஞ்சுகளும் முதிர்ந்த பூச்சிகளும் தண்டு நுனி மற்றும் பூக்களில் உள்ள சாற்றை உறிஞ்சி சேதம் விளைவிக்கின்றன. பூச்சிகள் தாக்கிய மொட்டு மற்றும் தண்டு நுனி வாடி பிறகு கருகி 3 முதல் 5 நாட்களில் கீழே உதிர்ந்துவிடும். முதிர்ந்த பூச்சி கருப்பு நிறத்தில் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**: பூச்சி தாக்கிய பூக்கள், மொட்டு, தண்டு நுனி ஆகியவற்றை சேகரித்து அழித்துவிட வேண்டும். இளம் குஞ்சுகள் மற்றும் முதிர்ந்த பூச்சிகள் மற்றும் முட்டை குவியலை சேகரித்து அழித்துவிட வேண்டும். ஜனவரி மாதங்களில் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்து பிறகு பூச்சிகள் தாக்குதல் இருப்பின் அதனைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் 1மிலி/1லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து காலை, மாலை நேரங்களில் தெளிக்கலாம்.

**இமரல்டு நாவாய்பூச்சி**: இதன் தாக்குதல் குளிர்பிரதேசங்களில் அதிகம் காணப்படுகிறது. இளம் குஞ்சுகள் மஞ்சள் நிறத்திலும், முதிர்ந்த பூச்சிகள் பச்சை நிறத்திலும் இருக்கும். இளம் குஞ்சுகள், மொட்டுகள், தண்டு கொடிகளில் உள்ள சாற்றை உறிஞ்சி சேதம் உண்டாக்கும். பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும்போது பூக்களின் மொட்டுகள் உதிர்ந்துவிடும். தாக்கப்பட்ட இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** * பூச்சி தாக்கப்பட்ட இலைகள், முட்டை குவியல், இளம் மற்றும்

முதிர்ந்த நாவாய் பூச்சிகளை சேகரித்து அழித்து விட வேண்டும். *மோனோ குரோட்டோபாஸ் 1 மிலி/1லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்கலாம்.
* இளம் குஞ்சுகளும் முதிர்ந்த நாவாய் பூச்சிகளும் காய்களில் உள்ள சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். இதனால் காய்கள் சிறியதாகவும் பின் சுருங்கியும் காணப்படும். பூச்சி தாக்குதல் அதிகமாக இருக்கும்போது இளம் காய்கள் அதிக அளவில் உதிர்ந்துவிடும். இதனால் மகசூல் பெருமளவு குறைந்துவிடுகிறது. முதிர்ந்த பூச்சிகள் பச்சை நிறத்தில் காணப்படும். இந்த பூச்சிகளின் மூன்றாவது ஜோடி கால்களில் இலைபோன்ற அமைப்பு காணப்படும். இதனால் இதற்கு "இலை பாதம் நாவாய்பூச்சி' என்று பெயரிடப்பட்டுள்ளது.
செதில் பூச்சி தாக்கிய பயிரை சேகரித்து அழித்துவிட வேண்டும். மோனோகுரோட்டோபாஸ் 1மிலி/1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் தெளித்து கட்டுப்படுத்தலாம். (**தகவல்:** கு.கோவிந்தன், சா.ராஜதுரை மற்றும் தொண்டைமான், வேளாண் பூச்சியியல் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**தலைகீழாய் வளரும் தக்காளி**

பதிவு செய்த நாள் : மே 18,2011,00:00 IST



பொதுவாக தக்காளி செடியின் வேர் கீழ் நோக்கியும் தண்டு பகுதி புவி ஈர்ப்பு விசையை எதிர்த்து மேல் நோக்கியும் வளர்வது வழக்கம். இதுவே தக்காளியை மேலிருந்து கீழ்நோக்கி வளர்த்தால் எப்படி இருக்கும்? இந்த முயற்சியைத்தான் **"டாப்சி டர்வி'** என்ற நிறுவனம் முயற்சி செய்து பார்த்து, அவ்வாறு வளர்ப்பதற்கு தேவையான தொட்டியையும் வடிவமைத்து அமெரிக்க சந்தையில் விற்பனை செய்துவருகிறது.

ஒரு செடி கீழிருந்து மேல்நோக்கி வளரும்போது அது நீர் மற்றும் மண்ணிலிருந்து உறிஞ்சும் சத்துக்களை புவி ஈர்ப்பு விசையை எதிர்த்து கீழிருந்து மேல்நோக்கி அனுப்ப வேண்டியுள்ளது. எனவே செடியை மேலிருந்து கீழ்நோக்கி வளர்க்கும்போது உணவு பொருளானது புவி ஈர்ப்பு விசையை நோக்கி கீழே பாய்ந்து காய் பகுதிகளை நோக்கி செல்வதால் விளைச்சல் அதிகம் இருக்கும் என்கிறது அந்த நிறுவனம். அது மட்டுமின்றி செடி மேலே வளர்வதால் புழு மற்றும் நோய் பாதிப்பு பெருமளவு குறைகிறது என்கிறார்கள்.

நகர்புறங்களில் patio மற்றும் பால்கனிகளில் செடி வளர்ப்பதற்கு ஏற்ற அமைப்பு இது. நான் இந்த செடி வளர்ப்பு தொட்டியை வீட்டில் வளர்த்து சோதனை செய்து பார்த்தேன். தக்காளி செடி நன்றாகவே வளர்கிறது. என் வீட்டு கொல்லை பகுதியில் வெயில் குறைவாக கிடைப்பதால் இதன் உண்மையான விளைச்சலை என்னால் கணிக்க முடியவில்லை. ஆரம்ப காலங்களில் அடிக்கும் வேகமான காற்று இந்த செடியின் தண்டினை முறிக்க வாய்ப்பு உள்ளது. நான் வளர்த்தபோது ஒரு செடியின் தண்டு சிறிது முறிந்தாலும் அது தொடர்ந்து வளர்ந்து, அந்த கிளைகளில் காய்களையும் வைத்தது.

அமெரிக்காவில் நிறைய பேர் பால் கேனை மேலே கட்டி தொங்கவிட்டு இது போன்றே தக்காளி வளர்த்து முயற்சி செய்துள்ளனர். இதுபோன்ற மாதிரிகளை உருவாக்குவதும் மிக எளிது. உர சாக்கு பையை கிழித்து வட்ட வடிவில் தைத்து இதே போன்ற பிளான்டர்களை எளிதாக நாமே உருவாக்கலாம். இதே முறையில் நிறைய செடி வளர்க்கவும் புதிய வகை மாதிரிகளை எளிதில் உருவாக்கலாம். இந்தியாவில் இதுபோல் புதிய மாதிரிகளை வடிவமைத்து, உற்பத்தி செய்து விற்றால் உற்பத்தி செய்பவருக்கு பணமும் கிடைக்கும். மக்களும் வீட்டிலேயே காய்கறி வளர்க்க வாய்ப்பும் கிடைக்கும்.

முக்கியமாக கிராமப்புற சுய உதவி குழுக்கள் மூலம் இதை உற்பத்தி செய்வதன் மூலம் கிராமப்புறத்தில் நிறைய பேருக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது.

**-எம்.அகமது கபீர், தாராபுரம். 93607 48542.**

சென்ற 2010-11ம் நிதியாண்டில்சர்வதேச காபி ஏற்றுமதி அதிகரிப்பு

மே 18,2011,00:58



புதுடில்லி:சர்வதேச அளவிலான காபி ஏற்றுமதி, சென்ற 2011ம் நிதியாண்டில், 7 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. உலக நாடுகள், கடந்த 2010ம் ஆண்டு ஏப்ரல் முதல் நடப்பு ஆண்டு மார்ச் வரையிலான 11 மாதங்களில், சாதனை அளவாக, 10.1 கோடி காபி மூட்டைகளை (1 மூட்டை = 60 கிலோ) ஏற்றுமதி செய்துள்ளன.

இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 9.40 கோடி மூட்டைகளாக இருந்தது என, சர்வதேச காபி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில் காபியின் விலை உயர்ந்து வரும் நிலையிலும், இதற்கான தேவை மிக அதிகளவில் வளர்ந்து வருகிறது. இதன் காரணமாக, காபி உற்பத்தி நடவடிக்கைகள் சுறுசுறுப்படைந்து வருவதாக, இக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர் 2010 - செப்டம்பர் 2011), முதல் ஆறு மாதங்களில், சர்வதேச அளவிலான காபி ஏற்றுமதி, 5.30 கோடி மூட்டைகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, இதற்கு முந்தைய ஆண்டை விட, 15.4 சதவீதம் (4.60 கோடி மூட்டைகள்) அதிகம்.சென்ற 2010-11ம் காபி பருவத்தில், தொடக்கத்தில் காபி இருப்பு 1.30 கோடி மூட்டைகளாக உள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 36.7 சதவீதம் (2.05 கோடி மூட்டைகள்) குறைவு. சர்வதேச அளவில் காபிக்கு நல்ல விலை கிடைத்து வருவதையடுத்து, இந்தியாவின் காபி ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே, சென்ற நிதியாண்டில் மட்டுமின்றி, நடப்பு நிதியாண்டிலும் காபி கையிருப்பு குறையும் என, இந்திய காபி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரமேஷ் ராஜா தெரிவித்தார்.

**கடல் உணவு பொருள்கள்ஏற்றுமதி 25 சதவீதம் வளர்ச்சி**

மே 18,2011,00:54



புதுடில்லி:சென்ற 2010 - 11ம் நிதியாண்டில், நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 25.5 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.இந்தியாவிலிருந்து, உலகின் பல நாடுகளுக்கு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில், கடல் உணவுப் பொருள்களின் பங்களிப்பு சிறப்பான அளவில் உள்ளது.சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிதியாண்டில், நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, 260 கோடி டாலராக (11 ஆயிரத்து 960 கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், 250 கோடி டாலர் மதிப்பிற்கு ஏற்றுமதி செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டில், இதன் ஏற்றுமதி, இலக்கை விஞ்சி சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முந்தைய நிதியாண்டில் (2009-10), கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, 210 கோடி டாலராக (9,660 கோடி ரூபாய்) இருந்தது.ஐரோப்பா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில், 'பிளாக் டைகர்' எனப்படும் இறால்களுக்கு தேவை அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில், ஐரோப்பாவின் பங்களிப்பு 26 சதவீதமாக உள்ளது. இதைத் தொடர்ந்து, ஜப்பான் (20 சதவீதம்) மற்றும் அமெரிக்கா (17 சதவீதம்) ஆகிய நாடுகளின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

**உற்பத்தி அதிகரிப்பால் வெங்காயம் விலை மேலும் குறைந்தது**

மே 18,2011,00:48



சென்னை:வெங்காயம் உற்பத்தி அபரிமிதமாக உள்ளதால், அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.மேலும், மத்திய அரசின் கொள்கை காரணமாக, வெங்காய ஏற்றுமதியும் குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.நாட்டில் பருவம் தவறி பெய்த மழையால் கடந்த ஆண்டு இறுதியில், வெங்காயம் உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலை அதிகரித்தது.

ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபாயை எட்டியது. இதனால் மத்திய அரசு, வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது. இந்நிலையில், இவ்வாண்டு தொடக்கம் முதல் சந்தையில் வெங்காய வரத்து அதிகரித்ததால், விலை குறைந்தது.இதனால், வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. அதே சமயம், வெங்காய ஏற்றுமதியை சீராக வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.இதன்படி, ஒரு டன் வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 650 ரூபாயில் இருந்து படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது 175 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையுடன் இதர ஏற்றுமதி செலவுகளால் ஒரு டன் 225 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து விடுவதாகவும், இது சர்வதேச சந்தையில் நிலவும் விலைக்கு ஒப்பாக இருப்பதால், ஏற்றுமதி லாபகரமாக இல்லையென்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மேலும் குறைக்க வேண்டும் என்று அவர்கள் கோரி வருகின்றனர்.இந்நிலையில், உள்நாட்டில் வெங்காயம் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. நாசிக் சந்தையில் ஒரு குவிண்டால் வெங்காயம் 550 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை விற்பனையாகிறது. சென்னை, கோயம்பேடு காய்கறி சந்தையில் சில்லறை விலையில் ஒரு கிலோ வெங்காயம் 9 ரூபாயாக குறைந்துள்ளது.

வெங்காயம் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், ஏற்றுமதி குறைந்துள்ளதாலும், வியாபாரிகள்,

விவசாயிகளிடம் இருந்து வெங்காயத்தை குறைந்த விலைக்கே கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், முதலீட்டிற்கு ஏற்ற வருவாய் கிடைக்காமல் இழப்பை சந்தித்து வரும் விவசாயிகள், வரும் கரீப் பருவத்தில் வெங்காயத்தை குறைந்த அளவிலேயே பயிரிட திட்டமிட்டுள்ளனர். இதனால், வெங்காயம் உற்பத்தி குறையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு ரபி பருவத்தில் நாட்டின் வெங்காய உற்பத்தி 88 லட்சம் டன்னாக இருக்கும் என்று தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மதிப்பிட்டுள்ளது. கடந்த 2010-11ம் ஆண்டில் நம் நாட்டில் இருந்து 11 லட்சம் டன் அளவிற்கு வெங்காயம் ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு லட்சத்து74ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதியானது. அதே சமயம், நடப்பாண்டு, சென்ற ஏப்ரல் மாதத்தில் வெங்காய ஏற்றுமதி 30 ஆயிரம் டன் என்ற அளவில் குறைந்துள்ளது.வரும் 2011-12 ரபி பருவத்தில் நாட்டின் வெங்காய உற்பத்தி ஒரு கோடியே 25 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை கி@லாவிற்கு 150 ரூபாய் என நிர்ணயித்தால், ஏற்றுமதி அதிகரிக்கும் என்பதோடு, தங்களுக்கும் உரிய விலை கிடைக்கும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அவர்களின் கோரிக்கைப்படி, வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குறைப்பது குறித்து தேசிய @வளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு பரிசீலித்து வருவதாக கூறப்படுகிறது. இதன் பரிந்துரையை ஏற்று, விரைவில் வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நவுசாரி வேளாண் பல்கலையில் பயிற்சி:வாழை தண்டில் இருந்து நார் தயாரிப்பு**

பதிவு செய்த நாள் : மே 18,2011,01:35 IST

மோகனூர்: "வாழை தண்டில் இருந்து நார் தயாரிக்கும் முறையை, குஜராத் மாநிலம் நவுசாரி வேளாண் பல்கலை கண்டுபிடித்துள்ளது. அதற்கான பயிற்சியியும் பல்கலையில் வழங்கப்படுகிறது' என, கூட்டமைப்பு செயலாளர் அஜிதன் கூறினார்.இது குறித்து அவர் கூறியதாவது:தேசிய வேளாண் கண்டுபிடிப்புத் திட்டத்தின் கீழ், குஜராத் மாநிலம் சூரத் அருகில் உள்ள நவுசாரி வேளாண் பல்கலையில், வாழை மரத்தண்டில் இருந்து நார் மற்றும் காகிதம் வர்த்தக ரீதியாக தயாரிக்கவும், வாழை மர நடுத்தண்டில் இருந்து மிட்டார், மைக்ரோ கிரிஸ்டல் லைன் செல்லுலோர் கேப்சூல் தயாரிக்க பயன்படும் உபபொருள் ஆகியவற்றை வர்த்தக ரீதியாக

பிரித்து எடுக்கும் தொழில் நுட்பத்தையும் வெற்றிகரமாக உருவாக்கி வெளியிட்டுள்ளது.மண் மற்றும் நீர் மேலாண் ஆராய்ச்சி அலுவலகத்தில் கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கில், வாழை தோட்டத்தில் குழைகள் அறுவடை செய்தவுடன் வாழை மரங்களை வெட்டி, வயல் ஓரத்தில் நீர் நிலைகளில் விவசாயிகள் அப்புறப்படுத்துகின்றனர்.

ஒரு சில மறுதாம்பு பயிர்களுக்கு பதில் வாழை மரங்களை வெட்டி மண்ணில் புதைக்கின்றனர். அதனால், இம்மரத்தில் கிடைக்கக் கூடிய உபரியான நார் சத்து, நீர் சத்துக்களை பொருளாதார ரீதியில் பயன்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில், இத்தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.ஒரு ஏக்கரில் கூடுதலாக, 80 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வாழை மரத்தண்டுகளை இரண்டாக பிளந்து நடுப்பகுதியை அகற்றி மரப்பட்டையை கொண்டு "ராஸ்படார்' என்ற நவீன இயந்திரத்தின் மூலம் மரப்பட்டையில் இருந்து நார்கள் பிரித்து எடுக்க முடிகிறது. இத்தகைய நார்கள் உலர வைக்கப்பட்டு சணல் நூல் தயாரிக்கக் கூடிய இயந்திரங்களில் சிறு மாற்றம் ஏற்படுத்தி வடிவமைக்கப்பட்டு, வாழை நார் நூலாக திரிக்கப்படுகிறது.

அவை சரியான தொழில் நுட்ப அளவுகோல்கொண்டு நெசவு இயந்திரங்களில் பயன்படுத்தப்பட்டு, பல்வேறு பணிகளுக்கான துணியாக நெசவு செய்யப்படுகிறது.இவ்வாறு நெய்யப்பட்ட வாழை நார், திரைச்சீலைகள், மிதியடிகள், கைப் பை, கோணிகள் மற்றும் கை உரைகள் தயாரிப்பதற்கு வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பேப்பர் தயாரிப்பதில் மற்ற மரக்கூழ்களை விட தரத்திலும், உறுதியிலும் நார் கூழ் சிறந்து விளங்குகிறது. வாழை மரத்தண்டில் இருந்து, மிட்டாய் மற்றும் ஊறுகாய் வகைகளை தயாரித்து செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.நார் பகுதி போக மீதம் கிடைக்கும் கழிவில் இருந்து தரமான மண்புழு உரம் தயாரிக்கவும், கழிவுடன் நீர் சத்தில் இருந்து திரவ உரம் தயாரிக்கவும் சாத்தியக் கூறு இருப்பதாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வாழை சாகுபடியாளர் கூட்டமைப்பை சேர்ந்த, 10 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். நவுசாரி வேளாண் பல்கலையில், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வாழை விவசாயிகளுக்கு தொடர் பயிற்சி அளிக்க உள்ளதாகவும், அதனால், வாழை மர நார் தண்டில் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு வர்த்தக ரீதியில் பிரபலம் அடையும். வாழை சாகுபடியாளர்களுக்கு கூடுதல் வருமானம் பெற்றுத்தரக்கூடிய இத்திட்டத்தில் தமிழக விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை:வேளாண் இணை இயக்குனர் எச்சரிக்கை

பதிவு செய்த நாள் : மே 18,2011,01:43 IST

தர்மபுரி: "சில்லரை மற்றும் மொத்த உர விற்பனையார்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என வேளாண் இணை இயக்குனர் துரைசாமி தெரிவித்தார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் மே 1ம் தேதி முதல் சத்துக்களின் அடிப்படையில் பல்வேறு வகை உரங்களின் அதிகபட்ச புதிய விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளது. சில்லரை மற்றும் மொத்த உர விற்பனையாளர்கள் மே 1ம் தேதிக்குள் கொள்முதல் செய்யப்பட்ட உரங்களை பழைய விலைக்கே விற்பனை செய்ய வேண்டும். மே 1ம் தேதிக்கு பிறகு கொள்முதல் செய்யப்படும் உரங்களுக்கு புதிய விலையை நிர்ணயித்து விற்பனை செய்யலாம்.

விவசாயிகள் சில்லரை விற்பனை கடைகளில் உரம் வாங்கும்போது உரத்துக்கு உரிய அதிகபட்ச விற்பனை விலையை பில்லுடன் கேட்டு வாங்க வேண்டும். மேலும், உர விற்பனை நிலையங்களில் உள்ள உர மூட்டையின் மீது குறிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விலையை தெரிந்து அந்த விலைக்கு மட்டுமே உரங்கள் வாங்க வேண்டும். விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிருக்கு ஏற்றபடி வேளாண் துறையின் பரிந்துரையின் பேரில் மற்றும் மண் பரிசோதனையின் படியும் உரங்களை இட்டு செலவினை குறைக்கலாம். நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்வதாக விவசாயிகள் மூலம் புகார் பெறப்பட்டால், உரக்கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

உரங்களின் புதிய விலை (50 கிலோ): யூரியாவில் எம்.எஃப்.எல்., 278.88 ரூபாய், ஸ்பிக் 278.51 ரூபாய், என்.எஃப்.சி.எல்., 278.51 ரூபாய், இப்கோ 276.12 ரூபாய், கிரிப்கோ (குருணை) 276.12 ரூபாய், கிரிப்கோ (துகள்), 278.86 ரூபாய், கோரமண்டல் 276.12 ரூபாய், எம்.சி.எப்.,276.12 ரூபாய், ஆர்.சி.எஃப்., 278.98 ரூபாய். பொட்டாஷில் ஐ.பி.எல்., 312 ரூபாய், எம்.சி.எஃப்., 262.86., ஆர்.சி.எஃப்., 265.57., சூவாரி 315 ரூபாய், 16:20:0:13 உரத்தில் கோரமண்டல் 470 ரூபாய், ஐ.பி.எல் 373.90 ரூபாய், 20:20:0:13 உரத்தில் எம்.சி.எஃப்., 485 ரூபாய், ஆர்.சி.எஃப்., 419.74 ரூபாய், பாக்ட் 488.64 ரூபாய், ஸ்பிக் 466.93 ரூபாய், ஐ.பி.எல்., 410.30 ரூபாய், இப்கோ 520 ரூபாய், கோரமண்டல் 493 ரூபாய்.

14:35:14 உரத்தில் கோரமண்டல் 456.82 ரூபாய், 15:15:15 உரத்தில் ஆர்.சி.எஃப்., 403.99 ரூபாய், 12:32:16 உரத்தில் சூவாரி 588 ரூபாய், 10:26:26 உரத்தில் இப்கோ 561.60 ரூபாய், கோரமண்டல் 517.40 ரூபாய், சூவாரி 567 ரூபாய், டி.ஏ.ப்பி., உரத்தில் இப்கோ 624 ரூபாய், சூவாரி 630.16

ரூபாய், கோரமண்டல் 517.40 ரூபாய், எம்.சி.எஃப்., 517.40 ரூபாய், ஆர்.சி.எஃப்., 564.77 ரூபாய், ஐ.பி.எல்., 608.40 ரூபாய், ஸ்பிக் 656.06 ரூபாய். சூப்பர் உரத்தில் கோரமண்டல் 215 ரூபாய், ஸ்பிக் 209.76 ரூபாய், கோத்தாரி 225 ரூபாய், சி.பி.எப்., 215 ரூபாய், 16:16:16 உரத்தில் ஐ.பி.எல்., 368.70 ரூபாய், டி.எஸ்.பி., உரத்தில் ஐ.பி.எல்., 418.60 ரூபாய் என புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய விலைக்கு உரங்களை வாங்கி விவசாயிகள் பயனடையுமாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென்னையை தாக்கும் கருத்தலை புழுக்கள்:கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 18,2011,01:55 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் அவற்றை "உழவியல், உயிரியல் மற்றும் ரசாயன முறைகளில் கட்டுப்படுத்த வேண்டும்' என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14,700 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பர்கூர், மத்தூர் மற்றும் ஊத்தங்கரை வட்டாரங்களில் அதிக அளவு தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் அகரம், பாரூர் மற்றும் நாகரசம்பட்டி ஆகிய கிராமங்களிலும் கிருஷ்ணகிரி வட்டாரம் அவதானப்பட்டி கிராமங்களிலும் தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

தென்னை மரத்தின் வெளிப்பக்க வரிசையில் உள்ள முற்றிய ஓலைகளில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் காணப்படும். நோய் தாக்கப்பட்ட தென்னை மரங்களின் மட்டைகளின் அடிபாகத்தில் இலைகள் கருந்தலைப்புழுக்களால் அரிக்கப்பட்டு சோகைகள் தீயினால் காய்ந்தது போன்று தோற்றமளிக்கும். இலைகளின் அடிப்பாகத்தில் சக்கைகளிலான நீளான கூண்டுகள் காணப்படும். இந்த கூண்டுக்குள் புழுக்கள் வேகமாக நகர்ந்து செல்லும். தென்னை மரங்களின் வளர்ச்சியை முற்றிலும் அழிக்க கூடிய இந்த புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண இணை இயக்குனர் ராஜன் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கருந்தலைப்புழுக்களின் தாக்குதல் நவம்பர் முதல் மே மாதம் வரையிலும் மற்றும் பருவ மழைக்கு பின் ஆகஸ்டு முதல் நவம்பர் மாதம் வரை காணப்படும்.

தென்னையில் அனைத்து வயதுடைய மரங்களையும் இப்புழுக்கள் தாக்கும். தென்னையை தாக்கும் கருந்தலைப்புழுக்களை கட்டுப்படுத்த உழவியல் முறைகள், உயிரியல் முறைகள் மற்றும்

இரசாயன முறைகள் என ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள்வதே சிறந்ததாகும். உழவியல் முறைபடி கோடை மழை பெய்தவுடன் தென்னந்தோப்புகளில் சணப்பு தக்க பூண்டு போன்ற பசுந்தாள் உர பயிர்களை சாகுபடி செய்து 45 நாட்களுக்குள் மடக்கி உழவு செய்யலாம். மழை பருவம் தொடங்கியவுடன் மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழு உரம் இடலாம். மரம் ஒன்றுக்கு 5 கிலோ தரமான வேப்பம் புண்ணாக்கு இடலாம்.

கைவினை முறைபடி பாதிக்கப்பட்ட அடிமட்டைகளை ஓலைகளுடன் அகற்றி எரிக்க வேண்டும். உயிரியல் முறைபடி ஒட்டுண்ணிகளான "பபேராசியரோலா நெப்பான்டிஸ்' ஹெக்டேருக்கு 3 ஆயிரமும் அல்லது "பிர்கான் பிரேவிகாரினிஸ்' ஹெக்டேருக்கு 4,500 என்ற அளவில் மரத்தின் அடிபாகத்தில் ஜனவரி மாதம் முதல் மாதம் இரண்டு முறை தாக்குதலின் அறிகுறி குறையும் வரை விட்டு கட்டுப்பத்தலாம். ஒட்டுண்ணிகளை மரத்தின் அடிப்பகுதியில் விடவேண்டும்.

ஒட்டுண்ணிகளை கருந்தலைப்புழுவின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை புழுக்காலங்களில் இடவேண்டும். ரசாயன முறைபடி வளரும் மரங்களில் கருந்தலைபுழுக்களை கட்டுப்படுத்த மாலத்தியான்50 சதம் ஒரு மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தாக்குதல் அதிகம் உள்ள மரங்களின் இலைகளின் அடிப்பாகத்தில் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். வளர்ந்த மரங்களில் தாக்குதலை கட்டுப்படுத்த வேர் மூலம் மருந்து வைத்து கட்டுப்படுத்தலாம்.

நன்கு வளர்ந்த இளம் பழுப்பு நிற வேரினை தேர்ந்தெடுத்து சாய்வாக வெட்டி பின் இதனை பாலித்தீன் பையில் மோனோகுரோட்டோபாஸ் 10 மில்லி 10 மில்லி தண்ணீர் கலந்த கலவையில் வேரினைவிட்டு கட்டி விடவேண்டும். வேர் மூலம் மருந்து செலுத்துவது மற்ற முறைகளை விட எளியது. மருந்து கட்டிய பின் 40 நாட்கள் வரை காய் பறிப்பதை தவிர்க்க வேண்டும். கருந்தலை புழுவினால் பாதிப்புக்குள்ளான அனைத்து விவசாயிகளும் கோடை மழையை பயன்படுத்தி ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை கையாண்டு நோயை கட்டுப்படுத்தினால் தென்னையில் அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**அதிகாரிகள், வியாபாரிகள் முட்டுக்கட்டை:ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம் இழுபறி**

பதிவு செய்த நாள் : மே 18,2011,01:39 IST

ஈரோடு:ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைவதற்கு, அதிகாரிகளும், வியாபாரிகளுமே முட்டுக்கட்டையாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.ஈரோடு மாவட்ட விவசாயிகள் பெரும்பாலும் பணப்பயிரான மஞ்சளை அதிகம் பயிரிடுகின்றனர். ஈரோடு வேளாண்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி மற்றும் தனியார் வெளி மார்க்கெட் என, நான்கு இடங்களில் டெண்டர் மூலமாக, மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது. நாள்தோறும் 1,500 விவசாயிகள் மூலம், 6,000 குவிண்டால் வரை மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது.நகரில் உள்ள நான்கு மஞ்சள் மார்க்கெட்களும் வெவ்வேறு இடங்களில் உள்ளதால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல் போய் விடுகிறது.

போக்குவரத்து நெரிசல் மிக்க நகரின் பிரதான பகுதிகளில் அமைந்துள்ள மார்க்கெட்களுக்கு, மஞ்சளை வாகனங்களில் கொண்டுவருவது பெரிதும் சிரமமாகிறது.இந்த சிரமத்தை போக்கும் வகையில், நகரில் செயல்படும் நான்கு மஞ்சள் மார்க்கெட்களையும் ஒருங்கிணைத்து, ஈரோட்டின் வெளிப்பகுதியில், ஒருங்கிணைந்த வணிக வளாகம் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். பெருந்துறை, நசியனூர் உள்ளிட்ட இடங்களில் இதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டும், திட்டம் நிறைவேறவில்லை. கடைசியாக நசியனூரில் வணிக வளாகம் அமைக்க எடுத்த முயற்சியும் ஈடேறவில்லை.விவசாயிகள் கூறியதாவது: ஓடாநிலை வடிவேல்: ஆண்டுக்கு 150 குவிண்டால் மஞ்சளை கொண்டு வருகிறேன்.

ஒருங்கிணைந்த வளாகம் அமைந்தால் மட்டுமே நல்ல விலை கிடைக்கும். நகருக்குள் போக்குவரத்து நெரிசலும், போலீஸார் தொல்லையும் ஏற்படுகிறது. தாமதமாக சென்றால், மார்க்கெட்டுக்கு அதிகளவில் மஞ்சள் வந்துவிட்டது எனக்கூறி, மூட்டைகளை இறக்காமல், வெளியே நிறுத்தி விடுகின்றனர். வண்டி வாடகைதான் நஷ்டம் ஏற்படுகிறது. வணிக வளாகம் அமைத்தால், அங்கு மஞ்சளை கொண்டுவர நாங்கள் தயாராக உள்ளோம். "சிட்டி'க்குள் இருந்து பழகிவிட்ட அதிகாரிகள் மற்றும் வியாபாரிகள் அங்கு வர மறுக்கின்றனர்.கொடுமுடி கல்லாபுரம் கோட்டை சண்முகம்: ஆண்டுக்கு 200 குவிண்டால் மஞ்சள் விற்பனை செய்கிறேன். மஞ்சளை விளைவிக்கையில் ஏற்படும் கஷ்டத்தை விட, மஞ்சளுக்கு விலை கிடைக்காத போது அதிகமாக மன வருத்தம் ஏற்படுகிறது.மொடக்குறிச்சி குமரம்பாளையம் செங்கோட்டையன்: ஈரோடு மார்க்கெட்களில் விவசாயிகள் உட்காரக்கூட இடமில்லை. நாள் முழுவதும் டெண்டர் நடந்தால், மரத்தடியில் படுத்துகிடக்க வேண்டியுள்ளது.

குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லை. புதிதாக வணிக வளாகம் அமைந்தால், போதுமான வசதியும், மஞ்சளுக்கு நல்ல விலையும் கிடைக்கும்.சிவகிரி வள்ளிபுரம் குப்புசாமி: ஈரோட்டில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வெளிச்சந்தை அமைத்து, வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள், ஒருங்கிணைந்த வளாகம் அமைய ஒத்துக்கொள்ள மாட்டர். நகரை ஒட்டிய வணிக வளாகம் அமைத்தால் கூட, இடத்தை மாற்றி அங்கு செல்வர். 16 கி.மீ., தூரம் என்றால், கண்டிப்பாக வியாபாரிகள் இடத்தை மாற்ற மாட்டர்.

**சூரியகாந்தி விளைச்சல் மழையால் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மே 18,2011,01:46 IST

காங்கேயம்: காங்கேயம் சுற்றுப்பகுதியில் மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்பட்ட சூரியகாந்தி, கோடை மழையால் உற்பத்தி அதிகரிக்கும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.காங்கேயம் அருகே சாவடிபாளையம், வயல்காட்டுபுதூர், ரெட்டிபாளையம், தொட்டிபாளையம், பாலசமுத்திரம், பள்ளநாயக்கன்பாளையம், ஆனூர்நகர், கன்னிகிணறு பகுதிகளில் அதிகளவு மானாவாரி பயிராக சோளம், சூரியகாந்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 90 நாளில் விளையும் "கான்சன் பிரைட்' வகை சூரியகாந்தி ரகத்தை அதிகளவு சாகுபடி செய்துள்ளனர்.இரண்டு வாரங்களுக்கு முன்புதொடர்ந்து கோடை மழை பெய்ததால், சூரிய காந்தி அதிகாளவு பருப்பு பிடித்துள்ளது.

ஜூன், இறுதி முதல் விவசாயிகள் அறுவடை துவங்க உள்ளனர். விவசாயிகள் சிலர் இயற்கையாக அதிக பருப்பு பிடிப்பதுடன், கூடுதலாக தேன் உற்பத்தி செய்யும் வகையில் மகரந்த சேர்க்கை ஏற்படுத்த தேனீ ஈக்கள் வளர்க்கும் பெட்டி வைத்துள்ளனர்.வயல்காட்டு புதூர் விவசாயி ஆண்டிவேல் கூறியதாவது:காங்கேயம் பகுதியில் மானாவாரி பயிராக விவசாயிகள் அதிகளவு சூரியகாந்தி சாகுபடி செய்கின்றனர். மூன்று மாதத்தில் உற்பத்தி கிடைக்கிறது. சராசரியாக ஏக்கருக்கு 1,200 கிலோ வரை கிடைக்கும். கோடை மழையால் ஓரளவு பருப்பு பிடித்துள்ளது. ஜூன் இறுதியில் அறுவடை துவங்கும். சாகுபடி செலவு 9,000 ரூபாய் வரையாகிறது. விவசாயிகள் மொக்காக இருக்கும் போதே மகரந்தை சேர்க்கை ஏற்படுத்துவதுக்காக மாலத்தியான் மருந்து தெளிக்கின்றனர். சிலர் இயற்கையாக மகரந்தை சேர்க்கை ஏற்படுத்த, தேனீக்கள் வளர்க்கும் பெட்டிகளை வயல்களில் வைத்துள்ளனர். கோடை மழையால் தற்போது சூரியகாந்தி நன்கு விளைந்துள்ளது.வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கிலோ 33 ரூபாய் வரை விலைக்கு போகிறது.இவ்வாறு அவர் கூறினார்.